அசல் வழக்கு எண். 186/2018 வா.சா.1 சுரேஷ் த/பெ பெருமாள்

21.11.2022 குறுக்கு விசாரணை

நான் தறி வேலை செய்து வருகிறேன். தாவாவில் 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள் தான். 2 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் அப்பா பெயர் மொலையான் நாய்க்கர். ஆதியில் தாவாச் சொத்துக்கள் அனைத்தும் மொலையான் என்பவருக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான் 1ம் பிரதிவாதி என் அப்பா ஆவார் . மொலையான் என்பவருக்கு முனியாண்டி, தங்கவேல், சின்னப்பா, பெருமாள் பாபு மற்றும் முனியம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். முனியம்மான் மொலையானின் மூத்த மகள் என்றால் சரிதான். எனக்கு மேடோவர் செய்யப்பட்ட சொத்தானது என் அப்பாவின் பாகம் என்று சொன்னால் சரியல்ல. பாபு என்பவரின் பாகத்தை தான் எனக்கு மேடோவர் செய்துக் கொடுத்தார். மொலையானின் வாரிசுகள் எப்போது வீட்டை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. பாபு என் சித்தப்பா ஆவார். அவர் 13.07.2017 அன்று காலமாகிவிட்டார். பாபு திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். பாபு தனது பாகச் சொத்துக்களை யாருக்காவது உயில் அல்லது செட்டில்மென்ட் அல்லது வேறு ஆவணம் ஏதேனும் ஏற்படுத்தினாரா என்றால் இல்லை. இறந்த பாபுவின் வாரிசு சான்று எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முனியம்மாள் தனது கணவர் இரண்டாவது திருமணம் செய்துக் கொண்டதாலும், முனியம்மாளுக்கு குழந்தைகள் ஏதும் இல்லாத காரணத்தினாலும் தாய் வீட்டிலேயே தங்கிவிட்டார் என்றால் சரிதான். முனியம்மாள் முதியோர் பென்ஷன் வாங்கினார். அவரது பெயரில் வாக்காளர் அட்டை இருந்ததா என்று எனக்குத் தெரியாது. முனியம்மாள் தற்போது உயிருடன் உள்ளார். குடும்பச் சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டபோது முனியம்மாளுக்கு எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லை. முனியம்மாள் பாகப்பிரிவினையின் போது சாட்சி கையெழுத்து போட்டார்களா என்று எனக்குத் தெரியாது. என் அப்பா என்னிடம் அடமானம் போட்டுள்ளது பாபுவின் பாகம் என்றால் சரிதான். 22.01.2018 அன்று அந்த அடமானம் போடப்பட்டது. என் அப்பா அவர் வாங்கிய அடமானப் பத்திரத்தை என்னிடம் ஒப்படைத்தார். அதேபோல் என் அப்பா பாகப்பிரிவினை பத்திரத்தை என்னிடம் ஒப்படைத்தார். என் அப்பா ஒப்படைத்த அடமானப்பத்திரத்தில் தருமன் மற்றும் துரை ஆகியோர் சாட்சி கையெழுத்து மற்றும் இன்னாரென்று நிரூபித்தவர் கையெழுத்து போட்டுள்ளார்கள். என் அப்பா பெற்ற அடமானப்பத்திரத்தில் வட்டி விகிதம் ரூ.100/-க்கு ரூ.3/- என்று போடப்பட்டிருந்தது. இந்த வழக்கில் நான் எத்தனை சதவீத வட்டி கேட்டுள்ளேன் என்று நினைவில்லை. என்னுடைய தாவாவில் நான் குறிப்பிட்டுள்ள பிரதிவாதிகளின் வயது விவரம் சரியானது தான். தாவாவில் நானும், என் அப்பாவும் கல்லேரிப்பட்டு கிராமத்தில் மாரியம்மன் கோவில் பின் புறத்தில் வசிப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோது நானும் என் அப்பாவும் ஒரே விலாசத்தில் இருந்தோம். தற்போது நான் தனியாக வந்துவிட்டேன். முனியன் மற்றும் தங்கவேல் ஆகியோர் தற்போது பாகம் பிரிக்கப்பட்ட அதே சொத்தில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தறிவேலை செய்கிறேன் என்றும், பணம் கொடுக்கல், வாங்கல் தொழில் செய்வதற்கு எனக்கு லைசென்ஸ் உள்ளதா என்றால் இல்லை. நானும் என் அப்பாவும் வருமான வரி செலுத்துபவர் அல்ல. நான் மேடோவர் பெற்ற அடமானம் குறித்து ஏதாவது ஒருகணக்கு புத்தகத்தில் எழுதி வைத்தேனா என்றும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றும் கேட்டால் அவ்வாறு எதுவும் இல்லை. நான் தற்போது என் அப்பாவை விட்டு தனியாக வந்துவிட்டேன். என்

குடும்பத்தில் என் அப்பா, அம்மா நான் மற்றும் என் தங்கை உள்ளார். என் அப்பா கோரா மிஷினில் வேலை செய்து வருகிறார் என் அப்பா தனது வருமானத்தை வைத்து தான் குடும்பத்தை காப்பாற்றி வந்தார் என்றால் சரிதான். என்அப்பா நான் மேடோவர் வாங்கிய அடமானத்தை தவிர்த்து வேறு ஏதாவது கடன் கொடுத்துள்ளாரா என்றால் எனக்குத் தெரியாது. நான் வேறு யாருக்காவது கடன் கொடுத்துள்ளேனா என்றும் அது சம்மந்தமாக வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. இறந்துபோன பாபு என்பவர் பழங்காமூர் கிராமத்தில் ஒரு விவசாய நிலத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டு அந்த நிலத்தில் உள்ள ஷெட்டிலேயே தங்கியிருந்தார் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.)